www.agaram.lk

OL/2015/14-T-I,II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்க திருமறை I, II
Catholicism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## கத்தோலிக்க திருமறை I

**கவனிக்க :**
(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

**1.** இயற்கைக்குரிய உடல், ஆவிக்குரிய உடல் என்பன பற்றித் தூய பவுல் அறிவுரை வழங்கியது
(1) தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில்
(2) கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில்
(3) திமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகத்தில்
(4) எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில்

**2.** தம் மனைவியைச் சகோதரி எனக் கூறி தம் வாழ்வைப் பிலிஸ்தியரிடமிருந்து பாதுகாத்துக் கொண்டவர்
(1) ஆபிரகாம் (2) ஈசாக்கு (3) யாக்கோபு (4) தாவீது அரசன்

**3.** "என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன்" என்று இறைவாக்குக் கூறியவர்
(1) எரேமியா இறைவாக்கினர் (2) எசக்கியேல் இறைவாக்கினர்
(3) மீக்கா இறைவாக்கினர் (4) நாத்தான் இறைவாக்கினர்

**4.** "ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது, ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்." இங்கு குறிப்பிடப்படும் அருள்பொழிவு செய்யப்பட்டவர் யார்?
(1) திருமுழுக்கு யோவான் (2) எசாயா இறைவாக்கினர்
(3) இயேசு (4) தாவீது அரசன்

**5.** சிலை வழிபாடு பாவமான செயலாக இருப்பது, பத்துக்கட்டளைகளில் எத்தனையாவது கட்டளையின் படியாகும்?
(1) முதலாம் கட்டளை (2) இரண்டாம் கட்டளை
(3) மூன்றாம் கட்டளை (4) ஒன்பதாம் கட்டளை

**6.** "............... தூய ஆவியானவரின் கொடைகளைப் பெற்றுக்கொள்ளும்" என்ற வார்த்தைகளை உச்சரித்து வழங்கப்படும் அருளடையாளம் எது?
(1) குருத்துவம் (2) திருமுழுக்கு
(3) திவ்விய நற்கருணை (4) உறுதிபூசுதல்

**7.** மேற்கு, கிழக்கு ஜேர்மனியென வேறுபடுத்திய பேர்லின் மதிலை உடைத்து, நாட்டை ஒன்று சேர்ப்பதில் முன் நின்றவர்
(1) திருத்தந்தை II வது அருளப்பர் சின்னப்பர் (2) தூய மக்ஸிமிலியன் கோல்பே அடிகளார்
(3) திருத்தந்தை XXIII வது அருளப்பர் (4) திருத்தந்தை VI வது சின்னப்பர்

**8.** பத்து வயதில் மரியன்னையிடம் இரண்டு முடிகள் இருந்ததாகக் காட்சி கண்டவர்
(1) முத்துப்பேறுபெற்ற அன்னை தெரேசா (2) தூய அக்னேஸ்
(3) தூய மக்ஸிமிலியன் கோல்பே அடிகளார் (4) தூய சில்வெஸ்டர் அடிகளார்

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**9.** இறைவனுடனும் திருச்சபையுடனும் முறிந்த உறவை மீண்டும் கட்டியெழுப்பும் அருளடையாளமாவது
(1) திவ்விய நற்கருணை (2) உறுதிபூசுதல்
(3) மெய்விவாகம் (4) ஒப்புரவு

**10.** திருமுழுக்கில் முக்கிய சடங்காக அமைவது
(1) வெண்ணிற ஆடை அணிவித்தலும் மெழுகுவர்த்தி ஏற்றுதலும்
(2) மெழுகுவர்த்தி ஏற்றுதலும் சாத்தானை விட்டுவிடுதலும்
(3) தண்ணீரை ஊற்றுதலும் மூவொரு கடவுளின் பெயரால் கழுவுதலும்
(4) பரிசுத்த கிறிஸ்மா தைலத்தால் பூசுதலும் வெண்ணிற ஆடையை நெஞ்சின் மீது வைத்தலும்

**11.** "அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள். ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் சரீரம்" என்ற வார்த்தைகள் குருவானவரால் எந்த செபத்தில் கூறப்படுகிறது?
(1) சபை மன்றாட்டில் (2) காணிக்கை மீது மன்றாட்டில்
(3) உட்கொண்டபின் மன்றாட்டில் (4) நற்கருணை மன்றாட்டில்

**12.** குருக்களின் கடமைகள் பற்றிக் கூறும் திருச்சபையில் ஆயர்களின் அருள்பணி பற்றிய விழித்தொகுப்பு வெளியிடப்பட்டது
(1) திரிதெந்தீனு பொதுச்சங்கத்தில் (2) இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தில்
(3) எருசலேம் பொதுச்சங்கத்தில் (4) முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில்

**13.** பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்பி அதை ஆற்றலுக்கு உட்படுத்த மனிதனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்ட போதும், அதை அவன் செயல்படுத்த வேண்டியது
(1) மனிதத்துவத்திற்கு மதிப்பளித்தாகும். (2) சட்டத்திற்கு அமையவாகும்.
(3) கலாசாரத்திற்கு ஏற்ற முறையிலாகும். (4) அரசியல் ஆட்சியாளர் சிந்திப்பது போலாகும்.

**14.** நமது ஆன்மீக வாழ்வை வளர்த்துக்கொள்ள உதவுவது
(1) தூய ஆவியின் கொடைகளாகும். (2) உடலைச் சார்ந்த இரக்கச் செயல்களாகும்.
(3) ஆன்மாவைச் சார்ந்த இரக்கச் செயல்களாகும். (4) தியானத்தின் நான்கு படிகளாகும்.

**15.** திருத்தூதர் காலத்தில் நோயில் பூசுதல் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடப்படுவது
(1) 2 கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் ஆகும். (2) தூய யோவான் நற்செய்தியில் ஆகும்.
(3) தூய யாக்கோபு எழுதிய திருமுகத்தில் ஆகும். (4) கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் ஆகும்.

**16.** கத்தோலிக்க திருச்சபையின் மறைநூலின்படி செபம் என்பது
(1) இறைவனிடம் தேவைகளை மட்டும் கேட்பதாகும்.
(2) மனதையும், உள்ளத்தையும் இறைவனிடம் எழுப்புவதாகும்.
(3) இறைவனுக்கு நன்றி கூறுவதாகும்.
(4) இறைவனுடைய குரலுக்கு செவிமடுப்பதாகும்.

**17.** இருள் நிறையுமிடத்தில் அருள் ஒளியையும், கவலை வாட்டும் இடத்தில் மனமகிழ்வையும் கொண்டு செல்ல வரம் கேட்டு செபித்தவர்
(1) அசீசியில் தூய கிளாரா (2) தூய அகுஸ்தினார்
(3) தூய வனத்து அந்தோனியார் (4) தூய பிரான்சிஸ் அசீசியார்

**18.** இறைவனுடனான உண்மையான அன்பை வளர்த்துக் கொள்ள முடிவது
(1) நல்ல நண்பர்களின் சகவாசத்தின் மூலமாகும்.
(2) பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாகும்.
(3) ஆழ் நிலைத்தியானத்தில் ஈடுபடுவதன் மூலமாகும்.
(4) மறை அறிவைப் பெற்றுக்கொள்ளுவதன் மூலமாகும்.

**19.** செபத்தின் முக்கியமானதோர் அம்சம்,
(1) சத்தமிட்டுச் செபித்தல் (2) தவறின்றி இறைவனை அழைத்தல்
(3) சமாதானமாக வாழுதல் (4) ஒற்றுமையை வளர்த்தல்

**20.** பரிசுத்த தைலங்கள் பயன்படுத்தப்பட்டு வழங்கப்படும் அருளடையாளங்களின் எண்ணிக்கை
(1) இரண்டு ஆகும். (2) மூன்று ஆகும். (3) நான்கு ஆகும். (4) ஐந்து ஆகும்.

**21.** இறைவன் தந்த அறிவின் ஆற்றலால் மனிதனின் புதிய கண்டுபிடிப்பு
(1) சூரியன், சந்திரன் (2) கோள்மண்டலம்
(3) விண்மீன் (4) விஞ்ஞானம்

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**22.** மனித இனத்தின் ஆரம்பம் பற்றி கவனம் செலுத்தும்போது கிறிஸ்தவ போதனையின்படி நமது எண்ணம், திருவிவிலியத்தில் எந்த நூலை நாடிச் செல்கிறது?
(1) சபை உரையாளர் (2) நீதித் தலைவர்கள்
(3) தொடக்க நூல் (4) நீதிமொழிகள்

**23.** இறை சாயலுக்கு அமைய தேர்ந்து கொள்ளவும், தீர்மானம் எடுக்கவும் மனிதனுக்குள் இருக்கும் ஆற்றல் எவ்வாறு காட்டப்படுகிறது?
(1) ஆதிக்கம் (2) ஞானம் (3) சுயாதீனம் (4) அழியாமை

**24.** விஞ்ஞானமும், கத்தோலிக்க விசுவாசமும் நேர்மாறானவை அல்ல என்பதற்குச் சிறந்த உதாரணம்
(1) தூசியின் படிவுகளும் மனித உடலின் மூலக்கூறுகளும் சமமானவையாகக் காணப்படுவது
(2) தீய்ந்து போகாத முட்செடியின் நடுவே இறைவன் மோசேக்குக் காட்சி கொடுத்தது
(3) இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்தது
(4) கிறிஸ்துவின் பிறப்பின்போது வால்விண்மீன் வானத்தில் தோன்றியது

**25.** இறைவன் தமது பெயரை வெளிப்படுத்தியது
(1) ஆபிரகாமிற்கு (2) ஈசாக்கிற்கு
(3) யாக்கோபுவிற்கு (4) மோசேக்கு

**26.** பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ராயேல் மக்களைத் தாம் தேர்ந்து கொண்ட மக்களாக ஏற்படுத்திக் கொண்ட நிகழ்வின் முக்கியமான இறை வெளிப்பாடாகக் காணக்கூடியதாக உள்ளது எது?
(1) இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டமை
(2) இறைவன் அஞ்சாதவர் எனக் காட்டியமை
(3) இறைவனின் வல்லப மகிமையை வெளிப்படுத்தியமை
(4) இறைவன் பார்வோன் மன்னனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டமை

**27.** பழைய ஏற்பாட்டில் இறை வெளிப்பாடு சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்ட உடன்படிக்கை எது?
(1) ஆதாம் ஏவாளுடன் செய்து கொண்ட உடன்படிக்கை
(2) மோசேயுடன் செய்து கொண்ட உடன்படிக்கை
(3) நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை
(4) ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கை

**28.** இயேசுவின் மறைதூதுப்பணியின் உச்ச நிலை ஆவது
(1) மனிதவதார மறைபொருள் (2) பாஸ்கா மறைபொருள்
(3) தோற்றம் மாறுதல் (4) இயேசுவின் திருமுழுக்கு

**29.** பழைய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்துபோன இறை பிள்ளைகள் என்ற உரிமையை புதிய ஆதாமின் கீழ்ப்படிதலினால் மீளப் பெற்றோம். இங்கு புதிய ஆதாம் யார்?
(1) தூய பவுல் (2) தூய பேதுரு (3) தூய மரியாள் (4) இயேசு

**30.** இயேசு பாவிகளுக்குக் காண்பித்த இரக்கம், இறைவன் பாவிகளுக்குக் காண்பிக்கும் இரக்கத்திற்குச் சமமானது என்பதனை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் யார்?
(1) இஸ்ராயேல் சமயத் தலைவர்கள் (2) நயீம்பட்டண விதவை
(3) புறவினத்தார் (4) நூற்றுவர் தலைவனின் பணியாளன்

**31.** தூய யோசேவாஸ் அடிகளார் சேர்ந்த துறவற சபை எது?
(1) பிரான்சிஸ்கன் (2) ஒறத்தோரியன் (3) ஆசீர்வாதப்பர் (4) டொமினிக்கன்

**32.** வாழ்நாள் முழுவதற்குமான உடன்படிக்கையாக விளங்கும் அருளடையாளமாவது
(1) நோயில் பூசுதல் (2) ஒப்புரவு (3) மெய்விவாகம் (4) உறுதிப்பூசுதல்

**33.** மெய்விவாகம் என்னும் அருளடையாளம் நிறைவேற்றப்படும் போது இயேசுவின் காணக்கூடிய பிரதிநிதியான குருவானவர், அவ்விடத்தில் இருப்பது
(1) திருமணப் பதிவாளராக
(2) திருச்சபையின் உத்தியோகபூர்வ சாட்சியாளராக
(3) திருமண வைபவத்திற்கு அழைப்புப் பெற்றவராக
(4) திருமண வைபவ இயக்குனராக

[பக். 4 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



11306

**34.** விடுதலைப் பயண நூலின்படி பிள்ளைகள் தம் வாழ்நாள் நீடிக்கவும், நலன் பெறவும் தாம் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளை ஆவது,
(1) நான்காம் கட்டளை (2) ஐந்தாம் கட்டளை
(3) ஆறாம் கட்டளை (4) ஒன்பதாம் கட்டளை

**35.** பழைய ஏற்பாட்டில் முதல் தடவையாகக் குறிப்பிடப்படும் குருவின் பெயரென்ன?
(1) ஆபிரகாம் (2) யாக்கோபு
(3) மெல்கிசெதேக் (4) மோசே

**36.** பின்வருவனவற்றில் கவனத்தைச் செலுத்துக.
A - நற்செய்தி அறிவித்தல்
B - இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றித்து இருத்தல்
C - ஆயனுக்குரிய பணி
D - குருத்துவம் தவிர ஏனைய அருளடையாளங்களை வழங்குதல்
மேற்கூறியவற்றுள் குருத்துவம் தொடர்பானவை
(1) A, B, C (2) A, B, D
(3) A, C, D (4) B, C, D

**37.** பணிவு, எளிமை, தூய்மை என்பன
(1) துறவற சபைகளின் பொது விழுமியப் பண்புகளாகும்.
(2) நல்ல விழுமியங்களாகும்.
(3) தூய ஆவியின் கொடைகளாகும்.
(4) துறவற வாக்குத்தத்தங்களாகும்.

**38.** இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் பணிக்காக வருகை தந்த மறைத்தூதுக் குழுக்களில் ஒன்று
(1) செபமாலைத்தாசர் சபை (2) பிரான்சிஸ்கன் சபை
(3) அமலமரித் தியாகிகள் சபை (4) ஆசீர்வாதப்பர் சபை

**39.** கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளோடு இணைவதால் நாம் பெறும் பேறு
(1) இவ்வுலகில் நம்மை வாழ வைக்கிறது.
(2) வாழ்க்கைப் பிரச்சினைகள் குறைகிறது.
(3) வாழ்க்கையை இலகுவாக வாழ முடிகிறது.
(4) விண்ணுலக செல்வங்களின்பால் நம்மை வழிநடத்துகிறது.

**40.** மனிதன் தனிமையடைந்து உறுதியற்ற நிலைக்குத் தள்ளப்படக் காரணம்
(1) அயலாரோடு மனத்தாக்கம் ஏற்படுத்திக் கொள்ளுதல்
(2) அருளடையாளங்களைப் பெறாதிருத்தல்
(3) தனித்துச் சிந்தனையில் ஈடுபடல்
(4) இறை மனித உரையாடல் முறிந்து போதல்

* *

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

14 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

කතෝලික ධර්මය I, II
கத்தோலிக்க திருமறை I, II
Catholicism I, II

## கத்தோலிக்க திருமறை II

**கவனிக்க:**

* **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) தொடக்க நூலில் மனித படைப்பைப் பற்றிய முதலாவது இரண்டாவது கதைகள் எழுதப்பட்டுள்ள மரபுகள் **இரண்டையும்** எழுதுக.

(ii) மனித அவதாரத்தை நினைவு கூர நாம் செபிக்கும் செபங்கள் **இரண்டும்** எவை?

(iii) இறைவனின் பிள்ளை ஆவதற்கும், புதிய வாழ்வை வலிமை பெறச் செய்வதற்கும் வழிகாட்டும் அருளடையாளங்கள் **இரண்டும்** எவை?

(iv) திருமுழுக்கு, உறுதிபூசுதல், குருத்துவம் என்னும் அருளடையாளங்களின் பொதுப் பண்புகள் **இரண்டு** எழுதுக.

(v) நல்லதொரு ஒப்புரவு அருளடையாளத்தின் படிமுறைகள் **இரண்டு** எழுதுக.

(vi) செபிக்கும்போது பரிசேயனிடத்தில் காணப்பட்ட ஒரு பண்பையும் வரிதண்டுபவனிடத்தில் காணப்பட்ட ஒரு பண்பையும் எழுதுக.

(vii) இயேசு உண்மையாகவே இறைமகன் என்பதற்கு மூவொரு இறைவன் சான்று பகர்ந்த சந்தர்ப்பங்கள் **இரண்டு** எழுதுக.

(viii) உடலைச் சார்ந்த இரக்கச் செயல்கள் **இரண்டு** எழுதுக.

(ix) தபக்காலத்தில் கத்தோலிக்கர்கள் மேற்கொள்ளும் பச்சாத்தாபச் செயல்கள் **இரண்டு** எழுதுக.

(x) தொடக்க நூலில் 1:28 வசனத்திற்கு அமைய இறைவன் ஆணையும் பெண்ணையும் படைத்து, அவர்களுக்குக் கொடுத்த பொறுப்புக்கள் **இரண்டு** எழுதுக.

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

**2.** (i) தூய யோசேவாஸ் அடிகளாரால் இந்நாட்டில் பணியாற்ற வரவழைக்கப்பட்ட ஒறத்தோரியன் சபைக் குருக்கள் **இருவரின்** பெயர்களை எழுதுக.

(ii) தூய யோசேவாஸ் அடிகளார் தாம் வாழ்ந்த காலத்தில் நிறைவேற்றிய புதுமைகள் **மூன்று** எழுதுக.

(iii) தூய யோசேவாஸ் அடிகளார் தமது மரணத்தருவாயில் இறுதியாகக் கூறிய அறிவுரையான "விளங்கிக் கொள்ளுங்கள் எந்த ஒருவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதையும் அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது" என்ற கூற்றை உமது வாழ்க்கைக்கு எவ்வாறு ஓர் முன்மாதிரியாகக் கொள்ளலாம் என்பதை **ஐந்து** உதாரணங்களுடன் விளக்குக.

**3.** (i) திருமணம் தொடர்பாகத் திருவிவிலியத்தின் தொடக்க நூலில் குறிப்பிடப்படும் படிப்பினைகள் **இரண்டு** எழுதுக.

(ii) கிறிஸ்தவ திருமணத்தின் மூலம் திருமணத் தம்பதிகள் தமது உடன்படிக்கையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதனை **மூன்று** உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

(iii) கிறிஸ்தவ குடும்ப வாழ்வைப் பாதிக்கும் சவால்களை வெற்றி கொள்ளும் விதத்தை **ஐந்து** காரணிகளின் துணையுடன் விபரிக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**4.** (i) தூய லூக்கா நற்செய்தியின்படி இறுதி இரா உணவின்போது அப்பத்தை எடுத்து இயேசு ஆற்றிய செயல்கள் **இரண்டு** எழுதுக.

(ii) நற்கருணைப் பலியைக் குறிக்கும் வேறு பெயர்கள் **மூன்று** எழுதுக.

(iii) திவ்விய நற்கருணை விருந்தினால் போஷிக்கப்படும் நீர், உமது வாழ்வின் மூலம் மற்றவர்களின் வாழ்வை வளம்படுத்த செய்யக்கூடிய செயல்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விபரிக்குக.

**5.** (i) இயேசு தமது சீடர்களுக்குக் கற்பித்த செபத்தினதும், சீடர்களுக்காக வேண்டுதல் செய்த செபத்தினதும் பெயர்களை எழுதுக.

(ii) இயேசு சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்த செபத்தில் நாம் செபிக்க வேண்டிய முறை அடங்கியுள்ளது என்பதற்கு **மூன்று** உதாரணங்கள் தருக.

(iii) செபம் கிறிஸ்தவ வாழ்க்கையில் மரத்திற்குப் பட்டையைப் போல் ஆக வேண்டும் என்பதற்கிணங்க உமது வாழ்க்கையில் செபத்தின் அனுபவத்தை **ஐந்து** காரணிகளின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

**6.** (i) தூய மத்தேயு நற்செய்தி 5: 21-26 வசனங்களின் படி மனித உயிரை அழிப்பவர்கள் மற்றும் தம் சகோதரரைத் தூற்றிப் பேசுபவர்கள் ஆளாக நேரும் தீர்ப்புக்கள் **இரண்டு** எழுதுக.

(ii) ஐந்தாம் கட்டளைக்கு எதிராகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் **மூன்று** எழுதுக.

(iii) "மனித அபிமானத்தையும் தூய்மையையும் வளர்த்துக் கொள்ள உம்மால் செய்யக்கூடிய நற்செயல்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விபரிக்குக.

**7.** பின்வருவனவற்றுள் **இரு** தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துச் சிறுகுறிப்பெழுதுக.

(i) "அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்" (மத்தேயு 5: 3 - 9)

(ii) நேர்மையான மனச்சான்று

(iii) கிறிஸ்தவ குடும்பம் செபத்தைக் கற்றுக்கொடுக்கும் முதல் மறைப் பாடசாலையாகும்

(iv) இறை இரக்கத்தின் ஆண்டு

(v) உடைந்துபோன பலத்தை மீளக் கட்டியெழுப்பும் குணமளிக்கும் அருளடையாளம்

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk